**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி**

**O.S.No.466/2021**

2025 ஆம் வருடம் மார்ச் மாதம் 04 ஆம் நாள் என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1873 ஆம் வருடத்தின் 10–வது விதிமுறைகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு. A.பாலசுப்பிரமணி (வா.சா.4) | தொழில் | : வழக்கறிஞர் |
| த/பெ., க/பெ. | : திரு. ஆறுமுகம் | வயது | : 29 |
| கிராமம் | : புது ஆயக்குடி | இனம் | : ஆண் |
| தாலுகா | : பழனி | நாள் | : 04.03.2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

<u>முதல் விசாரணை :–</u>

நான் புது ஆயக்குடியில் குடியிருந்து வழக்கறிஞர் தொழில் செய்து வருகிறேன். அ.வ.எண்.466/2021 வழக்கில் நீதிமன்ற உத்தரவின்படி நான் நீதிமன்ற ஆணையராக நியமிக்கப்பட்டு, 29.10.2022 அன்று வழக்குச் சொத்தை பார்வையிட்டேன். அப்போது வாதி தரப்பில் 2–ம் வாதி உடனிருந்தார். பிரதிவாதி தரப்பில் பிரதிவாதி பழனிக்குமார் இருந்தார். இருதரப்பு வழக்கறிஞர்களும் உடனிருந்தார்கள். பழனி நகராட்சி அளவையர் மற்றும் பழனி கிராம நிர்வாக அலுவலர் உடனிருந்தார்கள். நீதிமன்ற ஆணையரின் வரைபடத்தில் பச்சை வண்ணமிட்டு காட்டப்பட்டுள்ளவை பொதுவான பயன்பாட்டில் உள்ளவையா என்றால் ஆமாம். அவை பாதையாக உள்ளது. வழக்குச்சொத்தின் தென்கிழக்கு மூலையில் உள்ள கழிப்பிடம் சிவப்பு வண்ணமிட்டு வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது. அந்த கழிப்பிடம் நான் பார்வையிடும்போது அதன் மேற்கூரை சேதமடைந்திருந்தது. கழிப்பறையில் பதிக்கப்பட்டிருந்த பீங்கான் சேதமடைந்திருந்தது. பீங்கான் துகள்களும் அங்கு காணப்பட்டது. அது ஒரு இந்தியன் டாய்லட் ஆகும். பிரதிவாதிகளின் இடத்திற்குள் 558/2 டவுன் சர்வே

எண்ணுக்குள் வடகிழக்கு மூலையில் அவர்களது கழிப்பறை இருப்பதாக பிரதிவாதிகள் சொன்னார்கள். அதை என் வரைபடத்தில் நீல நிறத்தில் கருப்பு கட்டமிட்டு காண்பித்துள்ளேன். வழக்குச் சொத்தின் வடமேற்கு மூலையில் வாதிகள் மற்றும் பிரதிவாதிகளின் சொத்துக்கு நடுவில் பிரதிவாதிகள் மேற்கூரை அமைத்துள்ளார்களா என்றால் அமைத்துள்ளார்கள். வாதிகளின் இடத்திற்கு வாதிகளுக்கு என தனியாக கழிப்பிடம் இருந்ததா என்றால் டவுன் சர்வே எண்.558/1 என்பது வாதிகளின் இடம். அதில் கழிப்பறை எதுவும் இல்லை. வாதிகளின் இடத்தில் வீட்டின் தென்மேற்கு மூலையில் சாமி மாடம் இருந்தது. டவுன் சர்வே எண்.558/3 என்பது இருதரப்பிற்கும் பொதுவான பாதை என சர்வேயர் உறுதிப்படுத்தியிருந்தார். அதில் பாதை அமைப்பு இருந்தது. தென்கிழக்கு மூலையில் உள்ள கழிப்பறைக்குச் செல்ல இருதரப்பிற்கும் வழி இருந்தது என்றால் பிரதிவாதிகளின் இடத்திற்குள் டவுன் சர்வே எண்.558/4 ல் அவ்வாறான வழி இருந்தது. சர்வேயர் கொடுத்துள்ள அளவுகளும், நான் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள அளவுகளும் ஒன்றாகவே இருந்தது. நான் நேரடியாக பார்வையிட்டு வழக்குச்சொத்தில் இருந்தவற்றைத்தான் அறிக்கையாக தாக்கல் செய்துள்ளேன்.

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>

நான் எனது வரைபடத்தில் வாதிகளின் இடத்தில் சாமி மாடம் இருந்ததை குறிப்பிட்டு காட்டவில்லை என்றால் சரிதான். எனது அறிக்கையில் 4 வது பத்தியில் வாதிகளின் இடத்தில் தென்மேற்கு மூலையில் சமையல் செய்யக்கூடிய இடம் மற்றும் அதனை ஒட்டியுள்ள இடத்தில் கழிவு நீர் செல்லும் குழாயை ஒட்டி உள்ள இடத்தில் பாத்திரங்கள் துலக்கிவருவதாகவும் சொல்லும் இடத்தை எனது வரைபடத்தில் குறிப்பிட்டு காட்டவில்லை என்றால் சரிதான். தாவா கழிப்பறையின் செப்டிக் டேங்க் மேற்படி கழிப்பறையின் கீழ் பகுதியில் இருந்ததா அல்லது எடுப்பு கக்கூஸ் முறையில் அமைக்கப்பட்டிருந்ததா என்றால் அது செப்டிக் டேங்க் முறையில்தான் இருந்தது. எடுப்பு கக்கூஸாக இல்லை. நான் சொல்வது தவறு

என்றும், தற்போது வரை அது எடுப்பு கக்கூஸாக இருந்ததால் நகராட்சியிலிருந்து மேற்படி கழிப்பறையை மூடுமாறு அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அது எடுப்பு கக்கூஸாக இல்லை. எனது வரைபடத்தில் மஞ்சள் நிறத்தில் காட்டப்பட்டுள்ள பகுதி உபயவாதிகளுக்கு பாத்தியப்பட்ட நுழைவாயிலின் இருபுறமும் அமைந்துள்ள திண்ணை என வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் முதலில் அவ்வாறு குறிப்பிடப்பட்டுவிட்டு, பிறகு நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு முன்பாக உபயவாதிகளுக்கு பாத்தியப்பட்ட என்று தெரிவித்துள்ளதை அழித்துள்ளேன். எனது வரைபடத்தில் C என குறிப்பிட்டுள்ள பகுதியில் தற்போதுவரை எடுப்பு கக்கூஸ்–க்கான அமைப்புகள் இருப்பதாகச் சொன்னால் சரியல்ல. நான் பிரதிவாதிகளின் சொத்தை மட்டும் அளந்துவிட்டு, வாதிகளின் வீட்டின் எந்த ஒரு அமைப்பையும் காட்டாமல் அறிக்கை தாக்கல் செய்துள்ளதாகச் சொன்னால் சரியல்ல. டி.எஸ்.எண்.558/3 பாதையாக இருந்தது என சர்வேயர் தெரிவித்தார். அது யார் பெயரில் இருந்தது என்பதற்காக ஆவணங்களை சர்வேயர் என்னிடம் காட்டவில்லை.

**<u>மறு விசாரணை</u>** :– இல்லை.

K BHARATHI Digitally signed by K BHARATHI Date: 2025.03.04 16:58:19 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
பழனி.